உ

# திருக்குற்றால மாலை.

மேலகரம் மகா கவி
திரிகூடராசப்பன் கவிராயர் இயற்றியது.

திருக்குற்றாலநாதசுவாமி கோயில் வெளியீடு.

A. C. ஷண்முகநயினார் பிள்ளை B. A., B. L.,
(அட்வகேட்)
*மானேஜிங் தர்மகர்த்தர்*

A. சேதுராமலிங்க முதலியார் B. A.,
*நிலக்கிழார்.*

H. நவநீதகிருஷ்ண மருதப்பபாண்டியன்,
*பெருநிலக்கிழார்*

*தர்மகர்த்தர்கள்.*

*ஸ்ரீ மீனாக்ஷி பிரஸ், தென்காசி.*

1953

உ

கடவுள் துணை.

# திருக்குற்றால மாலை.

## காப்பு.

பூமண்டலம்பரவும்புங்கவர்குற்றாலலிங்கர்
நாமஞ்சேர்பாமாலைநாட்டவே — தாமஞ்சேர்
தந்தமதத்தந்திமுகத்தந்தைதுணைச்செந்தினகர்க்
கந்தனிணைச்செஞ்சரணங்காப்பு.

## நூல்

மொழிகொண்டமூவர்திருப்பாடல்கற்றுமுழுதுமுன்பால்
வழிகொண்டபேரன்புவைப்பதென்றோகுழல்வாய்மொழிப்பெண்
விழிகொண்டகாட்சிக்கெளியாய்பெண்பூமிபொன்வேட்கையெல்லா
மொழிகொண்டதொண்டர்க்குரியாய்குற்றாலத்துறைபவனே (1)

எனக்கேறநின்வழிநில்லாமல்யானெனதென்னும்வழி
தனக்கேறியைவர்தடையிற்பட்டேன்றடைதீர்ப்பதற்கோ
கனக்கேளுனையன்றிக்காணேன்முழுதுமுன்கையிற்பிள்ளை
யுனக்கேயடைக்கலங்கண்டாய்குற்றாலத்துறைபவனே (2)

பொன்னைப்பரமென்றுமின்னார்கலவிப்புலவியின்பந்
தன்னைப்பரமென்றுமேயிருந்தேன்யமதண்டம்வந்தாற்
பின்னைப்பரமொன்றுங்காணேனுனதருட்பேறருள்வா
யுன்னைப்பரமென்றுசார்ந்தேன்குற்றாலத்துறைபவனே (3)

ஆக்கமுண்டாகமகிழ்ச்சியுண்டாகியுமல்லவென்றா
லேக்கமுண்டாகியுமேயிளைத்தேனன்பரின்பக்கல்விக்
தேக்கமுண்டாகியுந்தேறேனெனைமுற்றுந்தேற்றுகண்டா
யூக்கமுந்தூக்கமுமில்லாய்குற்றாலத்துறைபவனே (4)

அருமந்தநின்னருள்போற்றேன்பொசிப்புக்கமைத்தபடி
வருமென்றிருக்கவுமாட்டேன்பிறவிமயக்கமறக்
குருவென்றுநீவந்துதோன்றாய்முன்மூவர்கள்கோட்டைகொன்ற
வொருமந்தகாசப்படையாய்குற்றாலத்துறைபவனே (5)

பெற்றார்தம்பிள்ளைகளுணவறியார்பிள்ளைநோவறிந்தாற்
சற்றாகிலும்பகிர்ந்தாற்றறியார்தந்தைதாயினுமென்
பற்றாப்பசிகண்டமுதூட்டிநோயறப்பார்க்கவல்ல
வுற்றாருனையன்றியுண்டோகுற்றாலத்துறைபவனே (6)

மறையாடுந்தெய்வத்திரிகூடஞ்சார்ந்துவடவருவித்
துறையாடியுன்னைத்தொழுவதென்றோதடஞ்சோலையெல்லாஞ்
சிறையாறுகால்வண்டுபண்பாடமாந்தளிர்ச்செங்கரத்தா
லுறையாடுந்தேனமுதூட்டுங்குற்றாலத்துறைபவனே (7)

கிள்ளைகள்போற்படித்தாவதிங்கேதுன்கிருபையின்பால்
பிள்ளைகள்போலுண்ணப்பேறருள்வாய்கிளிப்பிள்ளையெல்லாம்
வள்ளைகள்பாடுஞ்சித்ராநதியாயன்புவைத்ததொண்ட
ருள்ளையெல்லாங்கொள்ளைகொண்டாய்குற்றாலத்துறைபவனே()

ஆசையெலாம்பொருண்மேலாயொருவனகத்திலிரா
வேசையுமென்னெஞ்சுமொக்குங்கண்டாய்விண்ணுளோர்புரியும்
பூசையம்போருகத்தாளாய்நிறைந்தசம்பூரணமா
மோசையும்விந்துமாவாய்குற்றாலத்துறைபவனே (9)

கருக்கொண்டபோதுள்ளுங்கன்மவியாதிகருவிலுருப்
பெருக்கும்பொழுதுநெருக்கும்வியாதிபிறந்துபின்னை
யிருக்குஞ்சடமும்வியாதியென்றாலிதைநம்பிநன்றா
யுருக்குஞ்சென்னமெடுத்தேன்குற்றாலத்துறைபவனே (10)

கன்மமரும்பியவாவீங்கியைம்புலன்கண்கள்வைத்துப்
பன்மலஞ்சிக்கொண்டசென்மவியாதிபழுத்துவந்தாற்
றன்மவயித்தியன்சத்ரமிடாமற்றவிர்க்கமருந்
துன்மலர்த்தாளிணைதாராய்குற்றாலத்துறைபவனே (11)

அமையம்பலவுமொருபொழுதாயசையாமலுன்றன்
சமயங்கருதத்தவமெய்துமோசண்பகாடவிசூழ்
இமயம்பெறுமங்கைசுந்தரிகோமளையாமளையென்னும்
உமையம்பிகைமணவாளாகுற்றாலத்துறைபவனே (12)

பூங்காரணிகுழலார்மயக்கான்மனம்புத்திசித்த
மாங்காரந்தட்டழிவேற்கிரங்காயன்புநீர்பெருகித்
தேங்காமற்றேங்குமனத்தார்பரவித்தியானஞ்செய்யு
மோங்காரவட்டத்தொளியேகுற்றாலத்துறைபவனே (13)

முன்வடிவாய்முன்னிருந்திடலேதுமுளைக்கருவாப்
பின்வடிவார்க்கும்வினைவடிவேதுகைபேணிநின்ற
வென்வடிவேதுபின்யானெனன்பதேதென்னையாட்டிவைக்கு
முன்வடிவேதுகொல்சொல்லாய்குற்றாலத்துறைபவனே (14)

நில்லாவுடம்பிலுயிர்நின்றதோவுயிர்நின்றிடத்தே
யெல்லாவுடம்புநிலைநின்றதோவியல்சேர்வடிவும்
பல்லாவுயிருமொன்றேபுறம்போபகையோவுறவோ
வொல்லாமலோர்வழிசொல்லாய்குற்றாலத்துறைபவனே (15)

வருநாளவர்கண்மனைசந்தைக்கூட்டம்வரவற்றநாட்
டிருநாட்கழிந்தமடமொக்குமேயிதைச்சிந்தித்துநான்
பருநாட்கழிப்பதுபாரையயான்பலநாளுமுன்னை
யொருநாளிற்காண்பதுரையாய்குற்றாலத்துறைபவனே (16)

வாசக்குழந்தையுமாய்மடவார்மணவாளனுமாய்
ஆசைப்பருவமதுதப்பிளைந்தமாதருங்கண்
கூசக்கிழங்கொண்டுதோலாகிநாற்றங்குலைக்குமிந்த
வூசச்சடமென்றுபோமோகுற்றாலத்துறைபவனே (17)

திருத்தப்புகுந்திடிலண்டங்கள்கோடிதிருத்துவையென்
கருத்தைத்திருத்தவுனக்கரிதோகெளவைகாட்டுங்கன்ம
வருத்தத்தைமாற்றவோர்மாற்றங்கொடாய்குழல்வாய்மொழியா
ளொருத்திக்கோர்பாகங்கொடுத்தாய்குற்றாலத்துறைபவனே (18)

காணுறக்கண்டுனைப்போற்றறியார்கடையாம்பொசிப்பும்
வீணுறக்கங்களுமேகுறிப்பாரருள்வெள்ளத்தின்பால்
சேணுறக்கண்டுசிவயோகநித்திரைசெய்யுமன்ப
ருணுறக்கங்குறிப்பாரோகுற்றாலத்துறைபவனே (19)

நிறையும்பிரணவமூடாச்சதுர்மறைநீண்டகொப்பா
வறைகின்றசாகைகிளையாவறமுதனுன்கரும்பிக்
குறைவின்றிஞானமணநாறுந்தெய்வக்குறும்பலவி
லுறைகின்றமுக்கட்கனியேகுற்றாலத்துறைபவனே (20)

எல்லாவடிவுமொன்றானுமங்கங்கிருந்துநல்லார்
பொல்லாரெனவினையாட்டியதாலதுபோன்மனத்திற்
கல்லாமைகற்பிக்குமென்பாசநேசங்கருதிலன்ப
ருல்லாசநேசமொப்பாமோகுற்றாலத்துறைபவனே (21)

அருவித்துறைபடிந்தாடிவெண்ணீறிட்டுனன்பர்தம்பான்
மருவிப்பணிலமறுகூடுவந்துன்னைவாழ்த்தும்வண்ணங்
கருவிப்பவமறுகூடுசெல்லாக்கதிகாட்டுகண்டா
யுருவிற்குவமையொன்றில்லாய்குற்றாலத்துறைபவனே (22)

விருத்தரையும்வெல்லுமெல்லியர்நேசம்விடுத்துநின்பா
லிருத்தரைமாத்திரைக்கேயைவரோடலையேத்துமுண்மைக்
கருத்தரைக்கண்டுகருதாமற்சிந்தைகபாடஞ்செய்தா
லொருத்தரைநோவதழகோகுற்றாலத்துறைபவனே (23)

நானாரெனதுடம்பேதுணர்வேதெனைநாட்டினைநீ
யானாரெனத்தெளியேனெளியேன்செண்பகாடவிசூழ்
கானார்சிவமதுகங்கையின்மூழ்கக்கருணைசெய்தே
யூனாற்பிறவியொழிப்பாய்குற்றாலத்துறைபவனே (24)

வேம்பேபுழுவுக்கதிரசமாய்வெவ்விடங்கிடந்த
பாம்பேகலுழனுக்காரமுதாய்ப்பற்பலவுயிர்க்கு
மாம்பேதபேதமட்டூட்டியதால்வினையாம்பொசிப்பை
யோம்பேனருளமுதூட்டாய்குற்றாலத்துறைபவனே (25)

குன்றாதஞானக்கனியையஞ்ஞானக்கொடும்பசிக்குத்
தின்றேகவென்னினுமைவரொட்டார்திகைத்தேங்கிமனங்
கன்றாமலுன்னருளோடாடியுள்ளனுங்கள்ளனும்போ
லொன்றாகுநாளினியென்றோகுற்றாலத்துறைபவனே (26)

பொன்னென்றுசொன்னவுடனேமயக்குமென்புத்தியைநா
னென்னென்றுசொல்லித்திருத்திக்கொள்வேனெனையீன்றுசெஞ்சொற்
பன்னென்றுசொன்னபடிபோலவுள்ளபடியைநெஞ்சி
லுன்னென்றுபோதித்தருள்வாய்குற்றாலத்துறைபவனே (27)

நாறுங்குரம்பைக்குள்ளேமருண்டேனுனைநாடிமனந்
தேறும்படிக்கொருதேற்றஞ்சொல்வாயன்புதேக்கியுள்ளே
யாறுங்கருத்தினர்சித்தாம்புயத்திலருட்பெருக்கா
யூறுஞ்சிவானந்தத்தேனேகுற்றாலத்துறைபவனே (28)

ஆற்றிற்குமிழியின்றேற்றங்கள்போலண்டகோடியெல்லாந்
தோற்றிக்கணப்பொழுதேமறைப்பாய்துறைப்பாவிலுன்சீர்
சாற்றித்துதிப்பவர்முன்வருவாய்சண்டனென்னுயிரை
யூற்றிக்குடிக்குமுன்வாராய்குற்றாலத்துறைபவனே (29)

திடம்போதவுண்ணக்கிடைத்தானடக்குஞ்சிலகுறைந்தான்
முடம்போற்கிடக்குமிருந்தாலுவாதிக்குமுன்கொடுத்த
கடன்போலனுதினங்கைக்கூலிவாங்குங்களிசலிந்த
வுடம்போடிருப்பதெளிதோகுற்றாலத்துறைபவனே (30)

மழைமுகந்தேடும்பயிர்முகம்போலநின்வாய்த்தசங்கக்
குழைமுகந்தேடுமென்சிந்தைகண்டாய்கொன்றைவேணிவில்லத்
தழைமுகந்தாடமறைபாடச்சித்ரசபையினின்றே
யுழைமுகந்தாடுங்கரத்தாய்குற்றாலத்துறைபவனே (31)

வெண்மைப்பொருளின்விவகாரங்கணீங்கிவிகாரமில்லாத்
திண்மைப்பொருளென்றுசேருங்கொல்லோசிந்தைசெய்யுமன்பர்
வண்மைப்பெரும்பெருக்கேயொருக்காலும்மவுனம்விடா
ருண்மைச்சிவானந்தவாழ்வேகுற்றாலத்துறைபவனே (32)

கற்பனையாஞ்செகவாழ்க்கையெல்லாங்கண்டுகண்விழிக்குஞ்
சொற்பனமாமென்றுதூஷணியேனியான்றூஷணிக்க
நிற்பனவேண்டுநெறியிலியேனைநீபுரப்பா
யுற்பனஞானப்பொருளேகுற்றாலத்துறைபவனே (33)

அருவமென்றேருக்கருவமுற்றாய்தம்மறிவுமட்டுஞ்
சொருவமென்றோர்க்குச்சொரூபமுற்றாய்தொல்லைமூவுலகுஞ்
செருவில்வெல்வாய்படைப்பாயளிப்பாயுன்றிருவிளையாட்
டொருவிளையாட்டல்லகண்டாய்குற்றாலத்துறைபவனே (34)

வென்றறியாச்சமர்வெல்பவராகிலும்வெவ்வினையைச்
சென்றறிவால்வெல்லவல்லவருண்டோநின்செயல்பிரிந்தால்
நன்றறிவாருமிரப்பாருனதருணேட்டம்பெற்றா
லொன்றறியாருலகாள்வார்குற்றாலத்துறைபவனே (35)

பூதாதிபல்லுயிர்க்குந்தலையானநின்பொற்சிலம்பின்
பாதாம்புயஞ்சென்னிசேர்த்தருள்வாய்பெரும்பார்படைக்கும்
வேதாவின்மேல்விதியேவித்தில்லாமல்விளைபொருளே
யோதாதுணருமுணர்வேகுற்றாலத்துறைபவனே (36)

படையாதசென்மமுமேன்படைத்தாய்பஞ்சபூதவெறி
விடையாதியில்விடவோவிடவோமெத்தவேமெலிந்து
கடையாயினேனிரங்காயொருபாகங்கவுரிகொண்டா
யுடையாய்கரந்தைச்சடையாய்குற்றாலத்துறைபவனே (37)

அடுக்குறுந்துன்பமுமின்பமுமாயவலையடித்து
நடுக்குறுஞ்சென்மக்கடல்புகுந்தேநலியாமலென்னை
யெடுக்குறுநின்னருட்பேரின்பத்தோணியிலேற்றுகண்டா
யொடுக்கமுந்தோற்றமுமில்லாய்குற்றாலத்துறைபவனே (38)

இருகாதுகேட்கில்வருமாசையற்பமிருகண்கண்டாற்
பெருகாசைகொண்டுபிதற்றியதாற்பெரும்பேதமையாற்
கருகாதவண்ணங்கருகிநொந்தேன்கருத்தாறியுன்பா
லுருகாதநெஞ்சனையாள்வாய்குற்றாலத்துறைபவனே (39)

பொன்மேருவத்தனைபொன்குவித்தாலுமென்புத்தியின்ன
மென்மேலுந்தேடநினைக்குங்கண்டாய்வினைபோக்கறவே
யென்மேற்றயாவினுமெண்மடங்காவெந்தக்காலமுநா
னுன்மேன்மனம்வைப்பதென்றோகுற்றாலத்துறைபவனே (40)

பன்னாளுங்காமம்பொறுத்திருந்தாலும்பசியொருநா
ளென்னாற்பொறுக்கப்படாதுகண்டாயிதையார்க்குரைப்பேன்
சொன்னாற்பகுத்தறிவார்கண்டிலேன்சுற்றிப்பார்க்கிலெங்கு
முன்னாற்பதமன்றிக்காணேன்குற்றாலத்துறைபவனே (41)

விரகப்படாமணிக்கொங்கையர்காமத்தில்வீழ்ந்துபொல்லா
நரகப்படாமலென்னைப்புரப்பாயுண்மைஞானமொன்றிக்
கிரகப்படாமனத்தார்க்குரியாய்மதிக்கீற்றணிந்த
உரகச்சடாடவியானேகுற்றாலத்துறைபவனே (42)

வேறுபடாமலுலகாண்டமன்னரும்வெந்துடல
நீறுபடாரில்லைநீணிலத்தேநெடும்பாசவினைத்
தூறுபடாவழிபார்த்தியென்றேன்சொலச்சொல்லமன
மூறுபடாதென்னசெய்வேன்குற்றாலத்துறைபவனே (43)

மறுக்கிச்சுருக்கென்றெமதூதர்வந்துகைவாளெடுத்துக்
குறுக்கித்தறுக்குமுன்னேவருவாய்மந்திகுந்திவெள்வான்
முறுக்கிச்சுருக்கிக்குறித்துப்பலாப்பழமொக்கிவிக்கி
யுறுக்கித்தறுக்கிநடிக்குங்குற்றாலத்துறைபவனே (44)

வெறுமந்திமுன்னிருட்போல்வருங்காலன்வெகுண்டுயிரைத்
தெறுமந்த்யகாலத்தின்முன்வருவாய்கனிதின்றுதட்டி
மறுமந்திமேற்செலத்தேன்பாயுங்கொம்புவழுகிவிழுந்
துறுமந்திருந்திநடிக்குங்குற்றாலத்துறைபவனே (45)

அவப்பாடல்பாடியலைவதுதீரவனுதினமும்
சிவப்பாடல்பாடித்தெளிவதென்றோதெய்வப்பாடன்மறைத்
தவப்பாடல்காட்டுநற்றாருடையாய்கொன்றைத்தாருடையாய்
யுவப்பாடன்மாமன்றுடையாய்குற்றாலத்துறைபவனே (46)

வருபான்மதிவைத்தசெஞ்சடைக்காடும்வழுத்தமுத்தி
தருபாதமுமென்றுசந்திப்பனோமலைச்சாரலெலா
மிருபாலுமுத்துங்கனகமும்வாரியிறைத்துநித்த
மொருபாலருவிகுதிபாய்குற்றாலத்துறைபவனே (47)

செண்பகக்காவுந்திரிகூடமுஞ்சித்ரமாநதியுங்
கண்படைத்தார்பிரிந்தாற்றுவரோகன்மியாய்ப்பிறந்து
புண்படைத்தேனுக்கிரங்காயிரவிற்பொன்மேடையெல்லா
மொண்பகற்போலொளிவீசுங்குற்றாலத்துறைபவனே (48)

நீட்டிநினைப்பதைவேறுசெய்வாய்நினையாததெல்லாங்
காட்டிவைத்தங்ஙனமேமறைப்பாயெனைக்காத்தருள்வா
யாட்டியசைக்கின்றசூத்திரத்தாலனைத்தாருயிர்க்கு
மூட்டியுறக்கந்தருவாய்குற்றாலத்துறைபவனே (49)

மறவேன்மயக்கென்றுநெஞ்சில்விகாரத்தைவஞ்சமறத்
துறவேன்வெருட்டித்தொடருமில்வாழ்க்கையைச்சுற்றிச்சுற்றி
யறவேதளர்ந்துவிட்டேனிரங்காயென்றுமாசையற்றா
ருறவேமெய்ஞ்ஞானநறவேகுற்றாலத்துறைபவனே (50)

பேசியவாய்மையெல்லாமுனைப்பேசியுன்பேரருளாம்
வாசியைமேற்கொண்டுவாழ்வதல்லாற்கவிவாணரென்றாற்
கூசியமூடரைப்பாடித்திண்டாடிக்கொடுங்கலியா
மூசியின்மேனிற்கப்போமோகுற்றாலத்துறைபவனே (51)

கள்ளார்ந்தபூமணம்போலிருப்பாயுன்கருணையின்பத்
தெள்ளாரமுதுண்டுதேக்கியிராமற்றிகைத்துநித்தம்
வெள்ளாவிநாற்றமுடைநாறுங்காயவிடக்குக்குநா
னுள்ளாசைவைத்ததுநன்றோகுற்றாலத்துறைபவனே (52)

குறைந்தாற்குறைந்துநிறைந்தானிறைந்தெவர்கோலத்துள்ளு
மறைந்தாயுன்கோலத்தையாரறிவாரென்னைவாழ்விகண்டாய்
அறைந்தாடருவிமலேச்சாரல்சூழ்செண்பகாடவியி
லுறைந்தாயுலகநிறைந்தாய்குற்ருலத்துறைபவனே (53)

ஆகாரநித்திரையேகாரணமென்றறமயங்கி
மாகாமிநான்கொண்ட மாலொழிப்பாய்கங்கைமங்கையின்ப
மோகாகுழன்மொழிபாகாமெய்ஞ்ஞானத்தின்மோனம்விடா
யோகாவசந்தவைபோகாகுற்ருலத்துறைபவனே (54)

வண்டாடும்பூங்கழல்கண்டாடும்பான்மொழிமாதர்மயல்
கொண்டாடிநித்தமுந்திண்டாடினேன்கொடுங்கூற்றுதைத்துக்
தண்டாமுனியுய்யக்கொண்டாயமரரைத்தாங்கவிட
முண்டாயடைக்கலங்கண்டாய்குற்ருலத்துறைபவனே (55)

சாலக்கொடும்பசிதாக்கநொந்தேன்வினைதாக்குகலி
காலத்தைவெல்லக்கருணைசெய்யாய்தனிக்காலங்கண்டு
வாலக்கிளிமொழியாரிசைவாதுக்குமாறனைப்போ
லோலக்கருங்குயில்கூவுங்குற்ருலத்துறைபவனே (56)

கையார்தொழிலுக்கெல்லாந்தொலேப்பாரங்கருத்திலஞ்சிச்
செய்யாதிருக்கிற்கடும்பசிபாரஞ்செய்துண்ணவென்ருற்
பொய்யாமுடம்பிற்பிணிபாரநின்றுபுலம்புகின்றே
னுய்யாமைதீர்த்தருளேயேகுற்ருலத்துறைபவனே (57)

இம்பரைக்காமித்துவந்துநின்னன்பரையேத்தலின்றி
வம்பரைப்போய்வணங்காதருள்வாய்வண்டுகிண்டுமலர்க்
கொம்பரைக்காதமணக்குநத்திரிகூடக்குவட்டினின்றே
யும்பரைக்கானவர்கூவுங்குற்ருலத்துறைபவனே (58)

வெறுத்திடுந்திவினைசெய்தாலுந்தொண்டனைவேண்டியென்றும்
பொருத்தினியாளக்கடனுனக்கேமழைபோலிருள்போற்
கறுத்திடுங்கோதையர்பூந்தாளின்மாணிக்கக்கற்படிக
ளுறுத்திடுங்கோலமலைசூழ்குற்ருலத்துறைபவனே (59)

கொடுக்கச்சடைவற்றவுன்னையும்பாடிக்குலாமர்முன்போ
யிடுக்கட்படுவதழகல்லவேகவ்வையிடழிக்கு
நடுக்கத்தையாற்றப்படாதுகண்டாயெந்தநாளுமுண்ண
வுடுக்கக்குறைவருத்தாதேகுற்ருலத்துறைபவனே (60)

பேராசைக்கள்ளத்தையுள்ளேயடக்கிப்பிறருக்கெல்லாம்
பாராசையற்றவர்போற்றிரிவேன்பசுத்தோல்புனைந்து
போராசைகொண்டபுலிநானென்றுசையைப்போக்குகண் டா
யோராசையுமற்றயோகீகுற்றாலத்துறைபவனே (61)

கழிக்கும்பலபொழுதோர்பொழுதாய்க்கலங்காமலுள்ளே
விழிக்கும்விழிவெளியாவதென்றோவெண்ணிலாக்கதிரைப்
பழிக்குந்திரிகூடத்தருவிநன்னீர்பகலோனைவெம்மை
யொழிக்குந்திவலைதெளிக்குங்குற்றாலத்துறைபவனே (62)

செருமிக்கவலையுளந்தடுமாறித்தினம்பொருமிப்
பொருமிக்கரைவதுகண்டிரங்காய்புல்லும்பூடுங்கல்லுந்
தருமிக்கபட்சிமிருகங்களாதிசராசரமு
மொருமிக்கத்தெய்வவடிவாங்குற்றாலத்துறைபவனே (63)

சிறையோபடுவதினிக்கவையோதினந்தான்படுதன்
முறையோமுறையிடல்கேட்கிலையோமுன்னைநாளிற்செய்த
குறையோகுறையுன்முன்னேநிற்குமோகொண்டகோபமென்னோ
உறையோங்குகொண்டலுலாவுங்குற்றாலத்துறைபவனே (64)

தண்டேன்மலர்சொரிசண்பகச்சோலையுஞ்சந்நிதியும்
பண்டேபழகுநின்சித்ராநதியும்பலவளமுங்
கண்டேபிரிந்துந்தரித்தேனென்போலொத்தகன்னெஞ்சர்தா
முண்டேநின்கற்பனைக்குள்ளேகுற்றாலத்துறைபவனே (65)

பொறுக்கும்படைகொண்டுகோபத்தைமாய்த்துப்புரையற்றுநான்
வெறுப்புவிருப்பற்றிருப்பதென்றோவண்டம்விண்டுகிறு
கிறுக்கும்படிமலையைச்சிலையாக்கிக்கிளர்புரங்க
ளொருக்குந்தனிப்பெருவீராகுற்றாலத்துறைபவனே (66)

வருக்காம்பலகரும்பைப்பார்க்கநன்றுருவட்டெனவே
பெருக்காசைவிட்டுநின்றுள்ளேபரவிப்பிறவியின்வேர்
கருக்காமலென்றுமென்சிந்தைக்குள்ளேயொருக்காற்றெளிவு
மொருக்கான்மயக்கமுமாமோகுற்றாலத்துறைபவனே (67)

தருகோடியம்புயத்தாடொழும்போதுசதுரயுக
மிருகோடியுநொடிப்போதொக்குமேதுன்பமிட்டுங்கவ்வை
யருகோடியுன்னைப்பிரிந்தாலரைநொடிப்போதுமெனக்
கொருகோடிகோடியுகங்காண்குற்றாலத்துறைபவனே (68)

காண்பதெல்லாங்கண்மயக்கமென்றேமனங்கண்டிருந்தும்
வீண்பலகௌவைக்குளோடியதால்வந்துமீட்டருள்வாய்
சேண்படர்கங்கைச்சடையாய்பிரமன்சிரத்திலென்று
ஊண்பலிதேடுங்கரத்தாய்குற்றாலத்துறைபவனே (69)

கண்பார்த்துச்சோரமிடுங்கள்வரைவர்கைகள்ளமிட்டுப்
பண்பார்த்ததுன்னைப்பணிவதென்றோபுயல்பார்த்துநின்று
விண்பார்க்குஞ்சாதகம்போலுன்னைப்பார்த்துநின்மெய்யருட்பா
லுண்பார்க்குஞானப்பெருக்கேகுற்றாலத்துறைபவனே (70)

சிறுகாலந்தாயர்முலைப்பான்மயக்கஞ்செகத்தறிவு
பெறுகாலமாதர்முலைமேன்மயக்கம்பெருங்கிழமா
யிறுகாலம்வஞ்சப்பிணியான்மயக்கமுன்னின்பத்தைநா
னுறுகாலமாவதெக்காலங்குற்றாலத்துறைபவனே (71)

ஆணவங்காட்டுவித்தாசையுங்காட்டுவித்தார்க்குமில்லா
நாணமுங்காட்டியமாயையினால்நெடுநாட்கருத்தை
வீணவம்போக்கிவிட்டேனிரங்காய்கடல்வெவ்விடத்தி
னூணலங்காரமிடற்றாய்குற்றாலத்துறைபவனே (72)

கறுநோயுங்கன்மப்பிறவினோயுங்கருத்திற்கவ்வை
பொருநோயும்பூண்டசரீரத்தினோய்களும்போக்குந்தெய்வத்
திருநீருடையநின்சித்ராநதிக்கரைசேர்ந்தவன்றோ
யொருநோயுமின்றித்தவிர்ந்தேன்குற்றாலத்துறைபவனே (73)

மறைப்பொருளானநின்சேவடிவாழ்த்திவடவருவித்
துறைப்புனலாடிக்குழல்வாய்மொழியுடன்சோதியுன்னை
யிறைப்பொழுதாகிலுமுள்ளேதியானித்திருக்கநெஞ்சி
லுறைப்பிலையேயென்னசெய்வேன்குற்றாலத்துறைபவனே (74)

செய்வதெல்லாங்குற்றமேயதனாற்செகத்தோர்களென்னை
வைவதெல்லாங்கொடுந்துட்டனென்றேகட்ட வல்வினையா
னைவதெல்லாமுன்பொருட்டேசரண்புக்குநாளினிமே
லுய்வதுநின்பொருட்டையாகுற்றாலத்துறைபவனே (75)

தேயாமயக்கந்தெளிந்தோர்கண்முன்னந்தெளிவொன்றில்லாப்
பேயாகநின்றுபிதற்றுவனோமனப்பேதமையான்
மாயாமலத்துக்குள்வீணேகிடந்துமயங்குமிந்த
வோயாமயக்கந்தவிர்ப்பாய்குற்றாலத்துறைபவனே (76)

எளியேனையாட்டுஞ்செயல்யாவுமுன்செயலென்றுநன்றாய்த்
தெளியேனெவ்வாறுதெளிவிப்பையோதிரையேவரையே
வளியேமறிபுனலேகனலேநெடுவானகமே
யொளியேபரந்தவெளியேகுற்றாலத்துறைபவனே (77)

அடக்கிக்கொண்டாலுள்ளடங்கிக்கொள்வேன்புவியாதிக்குநீ
நடத்திக்கொண்டாலுநடந்துகொள்வேனன்றிநானென்றென்னை
தொடக்கிக்கொண்டாட்டமிடாதேசகலதொழிற்குமெண்சா[த்
ணுடக்கைக்கொண்டாட்டியசித்தாகுற்றாலத்துறைபவனே (78)

எழுதிண்புவியுநொடிக்கேறுஞ்சிந்தையெருதுமங்கோர்
பொழுதென்னொருமடக்கேறிவராதுபுலன்கலப்பை
பழுதன்றிச்சேர்க்கவல்லேனல்லனுன்பரமாநிலத்தி
லுழுதுண்டுவாழ்வதெவ்வாறேகுற்றாலத்துறைபவனே (79)

பிறர்பொருளாசித்துப்பொய்பேசிச்சாணும்பிழைப்பதற்கா
யறமுதனுன்குநிலைபிழைத்தேனடியார்க்கடிமைத்
திறமிலனுகிலுநின்னடியார்திருக்கூட்டமல்லா
லுறவினிவேறிலையாள்வாய்குற்றாலத்துறைபவனே (80)

கொலைபாதகஞ்செய்யக்கற்றேனுன்பத்தர்குழாத்திற்செல்ல
மலையாதவுண்மைவரக்கற்றிலேனெனை வாழ்விப்பையோ
நிலையாரணங்களுக்கெட்டாதநாதநெடுவெளிக்கே
யுலையாதவானந்தக்கூத்தாகுற்றாலத்துறைபவனே. (81)

ஆலமென்றாலுமமுதாமுனைக்கண்டவாடரவின்
கோலமுமாலையின்கோலமதாங்கொடியேன்வினையுங்
காலமுஞ்சாலநன்றாவதென்றேவரைகாலருவி
யோலமென்றார்க்குந்துறைசூழ்குற்றாலத்துறைபவனே (82)

தொண்டென்றுனக்குப்புரியேன்மகளிர்சுரிகுழற்கே
வண்டென்றுமாலையென்றுஞ்சுழல்வேனெனை வாழ்விப்பையோ
விண்டொன்றும்வெள்ளிப்பொருப்பாய்விருப்பும்வெறுப்புமில்லா
யுண்டென்றவர்மனத்துள்ளாய்குற்றாலத்துறைபவனே (83)

வன்பெருங்காயமெடுத்தவர்யார்க்கும்வருவதின்பத்
துன்பங்கள்கூடத்தொடர்ந்தல்லவோதொடர்ந்தாலுமித்தை
யென்பரஞ்சாட்டியிடையாமலொன்றுபட்டென்றைக்குநா
னுன்பரஞ்சாட்டியிருப்பேன்குற்றாலத்துறைபவனே (84)

செகந்தோறுஞ்சென்றுசெனித்தலுத்தேன்சென்மந்தோறும்புல்
முகந்தோறுஞ்சென்றலுத்தேனிரங்காய்முனிவோர்மடவா [லர்
ரகந்தோறுமுண்பலிக்காய்நடந்தாயயன்மாலென்றிங்கே
யுகந்தோறும்பேர்பெற்றிருந்தாய்குற்ருலத்துறைபவனே (85)

சென்னிறவேழமுகத்தெம்பிரானையுந்தென்னிலஞ்சிப்
பன்னிருகையனையும்பயந்தாய்வெற்பரசன்பெற்ற
கன்னியைக்கைவசமாக்கிக்கொண்டாயென்கருத்தையெல்லா
முன்னிருதாள்வசமாக்காய்குற்ருலத்துறைபவனே (86)

வாலத்தனையுமொடுக்கிமிக்காய்வினைவாய்பிளந்து
காலக்கடும்புலிபாயுமுன்னேசெண்பகாடவிக்கே
யேலக்குழன்மடமாதொடுநீயுமிருந்ததிரு
வோலக்கங்காட்டியருளாய்குற்ருலத்துறைபவனே (87)

பத்தியுமில்லைவயிராக்கியமில்லைபாரிலுண்மைச்
சத்தியமில்லைதவமாகிலுமில்லைசார்ந்தகுணப்
புத்தியுமில்லைகொடியேனிருந்ததுர்ப்புத்திக்குநீ
யொத்திருந்தெப்படியாள்வாய்குற்ருலத்துறைபவனே (88)

பழுக்குமுன்னேயுடல்நொய்க்குமுன்னேபதைத்தாவியெல்லா
நழுக்குமுன்னேயுட்கிநாறுமுன்னேநமன்பாசத்தி
விழுக்குமுன்னேகண்மூடுமுன்னேயிரதங்கடைவா
யொழுக்குமுன்னேவந்துதோன்ருய்குற்ருலத்துறைபவனே (89)

குருவாக்கியங்கள்கல்லேன்பத்தர்கூடுங்குழாத்திற்செல்லேன்
றிருவாக்குமுண்மைதெளிந்துமில்லேன்றெளிவேதுமின்றி
யெருவாக்கிடுமெலும்பானேன்முழுப்பித்தனென்னையுமோ
குருவாக்கிவிட்டெனையாள்வாய்குற்ருலத்துறைபவனே (90)

சுகதுக்கபாசத்திலேபிறவித்துவட்சிக்குநான்
முகம்வைத்தமோசந்தவிர்ந்திடவேமுதலந்தமிலாப்
பகலுற்றசுத்தவெளிக்கேயிருக்குநின்பாதபத்ம
யுகபத்திமுற்றுந்தருவாய்குற்ருலத்துறைபவனே (91)

வினைப்பாதகர்க்குண்முழுப்பாவியாகியும்வெட்கமின்றி
யெனைப்பார்க்கயார்மிக்கரென்றெண்ணுவேனுன்னையென்று
நினைப்பாரிகழ்ச்சிமகிழ்ச்சிவந்தாலுநிலைமைவிடா [மொன்ருய்
முனைப்பாரஞ்சாட்டியிருப்பார்குற்ருலத்துறைபவனே (92)

எனதெனக்கென்றுதவிப்பதல்லாலுனையெண்ணுதற்கென்
மனதுசற்றாகிலுமுண்மையுண்டோவஞ்சனேனுமுன்னைத்
தனதுபட்டாதிக்கம்போலேதமிழ்க்கவிசாற்றுவது
முனதுகட்டாயத்தொழில்காண்குற்றாலத்துறைபவனே (93)

முடக்கிட்டுமாயப்பிறவிக்குள்ளேவிட்டுமூட்டியென்னைத்
துடக்கிட்டுநானென்றுபேச்சிட்டதென்வரைசூழ்ந்துவட்டக்
கடற்குட்டமிட்டபுவனிக்கெல்லாமொருகம்பத்திலே
யுடக்கிட்டசூத்திரதாரீகுற்றாலத்துறைபவனே (94)

அன்பதுவைத்துனைப்போற்றுகிலேனடியார்க்கெளியா
யென்பதுசற்றுங்கருத்திலுன்னேனெனையாட்கொள்வையோ
முன்பதுமத்தயன்மாலானவர்முதலொன்றுக்கொவ்வா
வொன்பதுமானவொளியேகுற்றாலத்துறைபவனே (95)

மலைவாய்க்குவடன்னவார்முலையார்க்குமயல்கொடுதேக்
கிலைவாய்ப்படுபுனல்போலலைந்தேனஞ்சலென்றருள்வா
யலைவாய்ப்படாததெள்ளாரமுதேதுளையாதமுத்தே
யுலைவாய்ப்படாதசெம்பொன்னேகுற்றாலத்துறைபவனே (96)

தடுக்கும்பொழுதிலணுவளவேனுந்தடுத்துக்கொள்வாய்
கொடுக்கும்பொழுதிலெல்லாங்கொடுப்பாய்திருக்கூத்துக்குநீ
யெடுக்குஞ்சொரூபங்களாரறிவாரெனையாள்புலித்தோ
லுடுக்குஞ்சதானந்தயோகீகுற்றாலத்துறைபவனே (97)

நின்னுச்சிரமமுனியாச்சிரமநினதடியார்
பொன்னுச்சிரமமும்பூவாச்சிரமமும்பூமடந்தை
மன்னுச்சிரமமுமன்னுவர்காண்மனத்தாலும்வஞ்ச
ருன்னுச்சிரமபதத்தாய்குற்றாலத்துறைபவனே (98)

திரையற்றஞானக்கடலுடையாயுனைச்சேர்ந்துசென்மக்
கரையற்றவாரிகடக்கின்றவாறுகருணைசெய்வாய்
புரையற்றதொண்டர்மனத்தேயிருந்துபொருள்விளக்கு
முரையற்றமோனவுணர்வேகுற்றாலத்துறைபவனே (99)

நித்தர்கள்போற்றுநின்னுவணிமூலத்தினெல்லைவந்து
முத்தமிழ்பாடக்கருணைசெய்தாண்டனைமுற்றுமினிக்
கொத்தடியேனுக்குன்பொற்பதந்தாகுழல்வாய்மொழியா
ளுத்தமிபாகமுவந்தாய்குற்றாலத்துறைபவனே (100)

முற்றும்.

உ

# திருக்குற்றால ஊடல்.

மேலகரம் மகா கவி
திரிகூடராசப்பன் கவிராயர் இயற்றியது.

---

திருக்குற்றாலநாதசுவாமி கோயில் வெளியீடு.

---

A. C. ஷண்முகநயினர் பிள்ளை B. A., B. L.,
(*அட்வகேட்.*)
*மானேஜிங் தர்மகர்த்தர்.*

A. சேதுராமலிங்க முதலியார் B. A.,
(*நிலக்கிழார்.*)
H. நவநீதகிருஷ்ணமருதப்ப பாண்டியன்,
(*பெருநிலக்கிழார்.*)
*தர்மகர்த்தர்கள்.*

*ஸ்ரீ மீனாக்ஷி பிரஸ், தென்காசி.*

---

1953.

கடவுள் துணை.

# திருக்குற்றால ஊடல்.

## காப்பு.

பொருப்பிறை திருக்குற்றாலப் புனிதனும் புவனமீன்ற
வொருத்தியும் புலவிதீர்ந்த வோலக்க மினிதுபாடத்
திருக்கைவேற் கதிரென்றோங்குஞ் சேவகன் முன்னேதோன்றி
மருப்பெனப் பிறையொன்றேந்தும் வழுவையான் வழுவையானே

புவனமீன்ற ஒருத்தி - உலகத்தைத் தோற்றுவிக்கும் இறைவன் சக்தி. ஓலக்கம் - திருச்சமுகம், சந்நிதானம், காட்சி. வழுவை+யான் - யானைமுகத்தவனாகிய விநாயகன். வழு+வையான் - குற்றம் வைக்கமாட்டான். வழுவையான் வழுவையானே — அணிநயங்காண்க. பிறை - வளைந்த, விநாயகன் இளம்பிறையணிந்திருப்பதாக விநாயக புராணங் கூறும். மருப்பு - கொம்பு, (பொருப்பு+இறை - பொருப்பிறை)

## நூல்.

குழல்வாய்மொழியம்மையார் :

தேரேறுஞ் சூரியர்கள் வலம்புரியும்
வலம்புரியின் செம்பொற் கோயிற்
றூரேறு மலர்தூவித் தாலத்தார்
பரவியகுற் றாலத் தாரே
யேரேறு கடற்பிறந்த கருணைநகை
முத்துவெளுத் திருப்பதல்லால்
ஆரேறு மழுப்படையீர் பவளம்வெளுத்
திருப்பதழ காகுந் தானே 1

வலம்புரியும் - வலம் வரும். வலம்புரியின் செம்பொற்கோயில் - சங்கவடிவுடைய பொற்கோயில். (அடுக்கணி காண்க.) தாலத்தார் - பூமியிலுள்ளவர்கள். பரவிய - போற்றிய. முத்து - பல். ஆர் - கூர். பவளம் - உதடு, பவளநிறமாயிருக்கவேண்டிய உதடு.

குற்றாலநாதர் :

காகமணுகாத திரிகூடமலை
யணங்கேயுன் கற்பின் சீர்த்தி
யோகமுறை பணிந்தேத்தி யுயர்மறை
யெலாம்வெளுப்பா யுனக்கு மூத்த
மேகவண்ணன் கடல்வெளுப்பா யாமிருக்கு
மலைமுழுதும் வெளுப்பா யென்றா
லாகமெலாம் வெளுப்பான லதரம்வெளுப்
பேருதென் றூர்சொல் வாரே 2

மறை, பாற்கடல், கயிலைமலை மூன்றும் வெண்ணிறம். ஆகம் - உடம்பு. ஆகம் வெளுப்பு - நீறுபூத்த மேனி.

குழல்வாய்மொழி :

ஆரிருந்தும் தனித்திருந்தும் பிறைமவுலித்
திரிகூடத் தண்ண லாரே
சீரியபொன் முலைக்குறியும் வளைக்குறியும்
பெற்றிருந்த தேவ ரீர்தா.
மார்பிலொரு மைக்குறியும் வாடைமஞ்சட்
குறியுமின்று வரப்பெற் றீரே
நேரிழைதன் பேருரையீர் வஞ்சந்தானே
வுமது நெஞ்சந் தானே 3

ஆரிருந்தும் - பொருந்தியிருந்தும் மவுலி - முடி. முலைக்குறியும் வளைக்குறியும் - உமை சிவபிரானைத் தழுவக்குழைந்த கதையிற் காண்க. (காஞ்சிப் புராணம்)

குற்றால நாதர்:

நெஞ்சகத்தி னீயிருக்க நின்னையல்லா
லொருவரையு நினைய லாமோ
வுஞ்சலிட்ட குழைதடவுங் கயல்விழிப்பெண்
குழன்மொழியே யொன்று கேளா
யஞ்சனத்தின் வண்ணமல்ல திருச்சாந்து
வழிந்தநிற மதுவேயன்றி
மஞ்சளைப்போ லிருந்தநிறம் பொன்னிதழித்
தாதவிழ்ந்த மாற்றந் தானே 4

அஞ்சனம் - மை. இதழி - கொன்றை. உஞ்சலிட்ட - ஆடுகின்ற.

குழல்வாய்மொழி :

மாற்றுவெள்ளி மலையிலொரு பவளமலை
கொலுவிருக்கு மகிமை போல
வேற்றுவெள்ளை விடைமீதிற் காட்சிதருங்
குற்றாலத் தெந்தை யாரே
யாற்றுவெள்ளை சடையிருக்கக் கீற்றுவெள்ளை
மதியிருக்க வதிக மாநீர்
நேற்றுவெள்ளை சாத்தினதை யின்றுசிவப்
பானகண்ணை ணிறுத்தி னீரே 5

மாற்று - பொன் வெள்ளியின் தரம், உயர்ந்தவெள்ளி. ஆறு-கங்கை. கீற்று வெள்ளைமதி - மூன்றாம்பிறை மதி. வெள்ளை சாத்தினது - ஏழாந் திருநாட்காட்சிகளில் ஒன்று.

குற்றுல நாதர் :

நிறுத்திநாம் பிரிந்ததில்லை நீபிரிந்து
பனிவரைக்கே நிற்கு நாளிற்
பொறுத்துநாம் வடவாலின் கீழிருந்தோ
மதுதனக்குப் பொறுப்பில் லாமற்
சிறுத்துநாண் மலர்தூவிக் கறுத்துவந்த
சேவகனைச் சிவந்தபோது
குறித்துநாம் பார்த்தவிழி சிவப்பன்றோ
குழன்மொழிப்பூங் கொடியன் னளே 6

பனிவரைக்கே நிற்குநாள் - இமயமலையாசன் புத்திரியாயிருந்த நாள். வடவாலின் கீழிருந்தது — தெட்சணமூர்த்தியா யெழுந்தருளியிருந்தது. கறுத்து - கோபித்து. சேவகன் - மன்மதன். சிவத்தல் - கோபித்தல். கறுத்து, சிவந்து - முரண்தொடை.

குழல்வாய்மொழி :

அன்றளிற் கோவணமும் புலித்தோலும்
வேடமுமா யாலின் கீழே
பன்னாளும் தூங்கினநீ ரென்றலே
மணக்கோலப் பதம்பெற்றீரே
யின்னாளிற் சலவைகட்டிப் பூமுடித்துத்
தினஞ்சுகித்தா லிதுவோ செய்வீர்
மின்னரு மினிச்சிலபேர் வேண்டாவோ
நீண்டசங்க வீதி யாரே 7

தூங்கின - யோக நித்திரையிலிருந்த.

குற்றுல நாதர் :

வீதியாய் மரவுரிகிட் டினசனம்பூண்
டரியதவ வேடந் தாங்கி
ஆதிநாட் கான்றேரு மலைந்துதிரிந்
தானதுபோ யயோத்தி மேவி
மாதுசீதையைப்புணர்ந்து பாராண்ட
வுங்களண்ணன் மார்க்கமெல்லாங்
காதுகேட் டிருந்துமிது சொன்னதென்ன
குழல்மொழிப்பூங் கயற்கண் மாதே 8

கிட்டினசனம்-மான்தோல். தசரதராமன் கைகேயியின் சூழ்ச்சியால் நாடு துறந்து மரவுரியுடுத்தித் தவக்கோலங்கொண்டு காடுதோறுந்திரிந்து பின்பு அயோத்தி வந்ததும் லவன் குசன் என்ற இரு மக்களுடன் வாழ்ந்து அரசாண்ட கதையைக்குறிக்கும்.

குழல்வாய்மொழி :

மாதர்பாற் பலியிரந்தீர் பலியிடப்
பைந்தார் துகிலும் வளையுங்கொண்டீர்
சாதுவாய்த் தோலுடுப்பீர் அரையிலுள்ள
சோமனையுந் தலைமேற் கொள்வீர்
காதிலே பாம்பையிட்டீர் கழுத்திலே
நஞ்சையிட்டீர் கனபேய் கொண்டீர்
ஆதலா லுமைப்போலும் பித்தருண்டோ
குற்றாலத் தண்ண லாரே 9

மாதர்...........கொண்டீர். தாருகா வனத்து ரிஷிகள் ஆணவங் கெடுத்த கதை. தோலுடுப்பீர் - புலி, யானையின் தோலையுரித்து அணிவீர். சோமன் - சந்திரன். கனபேய் கொண்டீர் — பூதநாதராயிருத்தல். அரையிலுள்ள சோமன் - அரையிற்கட்டியவேஷ்டி, அரை குறையாயுள்ள சந்திரன்.

குற்றாலநாதர் :

அண்ணல்வரைத் திரிகூடப் பெண்ணமுதே
கேட்டியுங்க ளண்ணனான
கண்ணன்முதல் வரகுதின்று வாயாலெடுத்த
பண்டைக்கதை கேளாயோ
மண்ணிலொரு காற்சிலம்பைக் கையிலிட்டான்
கைவளையை வாய்மே லிட்டான்
பெண்ணொருத்திக் காயொருத்தி புடவைகிழித்
தானவனே பித்தனாமே 10

திருமாலவதாரங்களின் விசேடங்களைக்குறிக்கின்றது. சிலம்பு - மலை (கோவர்த்தனமலை) கையிலிடல் - குடையாகப்பிடித்தல். வளை - சங்கு பாஞ்சசன்னியம். கையிலுள்ள சங்கை ஊதினான் 4-ம்வரி இரணியாக்கன் ஒளித்துவைத்த பூமியை மீட்டக்கடலைக் கிழித்துப்போனான். கடல் பூமிதேவியின் ஆடையென்று புராணங்கள் கூறும்.

குழல்வாய்மொழி :

பித்தனென்றும் பாராமற் பெண் கொடுத்தா
னவனோடு பிறந்த வாசிக்
கித்தனைபெண் சிருமிட்டான் கையம்பா
வுமக்கிருந்தா னெந்தநாளும்
மைத்துனனைப் பாராட்டி எங்களண்ணன்
செய்தநன்றி மறந்ததாலே
சத்திபீ டத்துறைவீர் செய்தநன்றி
நீர்மறந்த சங்கை தானே 11

சங்கை - வழக்கம். கையம்பு - திரிபுரமெரித்தபோது திருமால் அம்பாயிருந்தது. சத்திபீடத்துறைவீர் - தரணிபீடத்திற்கெதிராய் வீற்றிருத்தல்.

குற்றுல நாதர் :

சங்கமெடுத்தே திரிந்தான் சக்கரா
யுதங்கொடுத்தோங் தலைநாட்கொண்ட
சிங்கவெறி தீர்த்தருளிச் செய்யாளை
முகம்பார்க்கச் செய்தோங் கண்டாய்
மங்கைகுழல் வாய்மொழியே உங்களண்ணன்
செய்தநன்றி மறந்ததாலே
யெங்கெல்லாம் பால்திருடி யெங்கெல்லா
மடிபடவு மேது வாச்சே 12

ஆயிரம் பூவுக்கு ஒன்று குறைய தன் கண்ணைப்பறித்துத் திருமால் அர்ச்சிக்கச்சிவபிரான் ஆழி கொடுத்தான். சிங்கவெறி - நரசிம்ம அவதார மூர்க்கம், செய்யாள் - இலக்குமி. பால் திருடியது - யசோதை வீட்டில் வளரும்போது கிருஷ்ணன் செய்த லீலைகளில் ஒன்று.

குழல்வாய்மொழி :

வாய்ச்சதிரி கூடமலைக் கிறையவரே
சொன்னமொழி மறக்கவேண்டா
மேச்சுவந்து சுமந்ததெங்க ளண்ணற்கோ
வுமக்கோவென் றெண்ணிப் பாரீர்
காய்ச்சியபால் கண்ணனுண்டான் வேடனெச்சி
னீர்கலந்தீர் கருணை யாமா
லாய்ச்சியர்கை யாலடிபட் டானையரேநீர்
பேடிகையா லடிபட் டீரே 13

ஏச்சு-பித்தாவென்று சுந்தரர் பாடிய வரலாறு பெரிய புராணங்கூறும். வேடன் எச்சில் — கண்ணப்பநாயனார் எச்சில் நீரால் அபிடேகித்தது. பேடி கையாலடிபட்டது - அருச்சுனன் சிவபிரானை விற்பிரம்பாலடித்தது.

குற்றுல நாதர் :

அடிப்பதுவு மாய்ச்சியர்பால் குடிப்பதுவு
மிசைந்தானு மரச னாக
முடித்தலையில் முடியுமின்றிப் படிபுரந்தா
னும்முனது முன்வந் தானும்
படிக்கலமும் பசுநிறையும் பயின்றானுங்
குழல்மொழிப்பூம் பாவை கேளா
யிடைக்குலத்திற் பிறந்தானோ வெதுகுலத்திற்
பிறந்தானோ விவன் கண்டாயே 14

படிக்கலம் - பாத்திரம்.

குழல்வாய்மொழி :

கண்டிருந்துங் கன்னியர்க்கா வெனைப்பிரிந்த
மதந்தானே கலவித்தேற
லுண்டிருந்த மதந்தானே வெங்களண்ணன்
குலத்தில்மறு வுரைத்தீ ரையா
பண்டிருந்த வுமதுகுல நான்சொன்னாற்
பழுதாமோ பரமரே நீர்
கொண்டிருந்துங் குலம்பேசன் ஞாயமோ
குற்றாலக் கூத்த னாரே 15

தேறல் - தேன். மறு - குற்றம்.

குற்றாலநாதர் :

கூத்திருந்த பதம்பெறவே கொதித்திருந்த
முனிவர்களுங் கொலுச் சேவிக்கக்
காத்திருந்த தேவர்களுங் காட்சிபெற
வேண்டியுனைக் கரந்து போனோம்
பூத்திருந்த திரிகூடப் பொருப்பிருந்த
பசுங்கிளியே புலவிக் காக
வேத்திருந்த வார்த்தையெல்லா மெதிர்த்திருந்து
நீயுரைத்தா லென்செய் வோமே 16

வேத்திருந்த - வேற்றுமையாயிருந்த.

குழல்வாய்மொழி :

என்மேலும் பத்தியில்லாத் தேவருண்டோ
வெனைப்பிரிந்து வீதிபோகத்
தென்மேவு திரிகூடச் செல்வரே
நீதியுண்டோ தேவரீர் மேல்
முன்மேவுங் குற்றமுண்டு திருவாக்குக்
கெதிர்வாக்கு மொழிந்த தாலே
தன்மேலுங் குற்றமுண்டு தமையனார்
மேலுமுண்டோ தாழ்த்தி தானே 17

குற்ருலநாதர் :

தம்மயனென் றுந் தங்கையென் றும் பேதகமோ
குழன்மொழிப்பூஞ் சகத்தை யீன்ற
வுமையவளே தமையனுனக் கருமையென்ரு
னமக்குமவ னருமை யாமே
நமையுமோர் குறையுரைத்தாய் நாமவனைச்
சரசமா நவின்ருேங் கண்டா
யிமையவர்கள் வேண்டுதற்கா யித்தனையும்
பொறுத்தருள்வா யிமய மாதே 18

குழல்வாய்மொழி :

மாதேவர் நீரொருவ ராடினது
கூத்தாச்சு வலியோர் செய்தால்
தீதேதுஞ் செமியாதீர் குற்ருல
நஞ்சையுண்டு செமிப்பீ ரையா
போதாது நீரளக்கு மிருநாழிப்
படியெனக்குப் பொன்னும் பூணுஞ்
சூதான வகைமுழுதுஞ் சொன்னலென்
னுற்பெருமை சொல்ல லாமோ 19

குற்ருல நஞ்சு - ஆல கால விடம்.

குற்ருலநாதர் :

சொன்னமலை தனதாச்சுப் பொன்னுலகு
வெள்ளிமலை சொந்தமாயிற்
றின்னமொரு பொருளுமுண்டோ பெண்கள்
பேதமைக்குணந்தா னிதுபோலுண்டோ
வுன்னரிய விளைநிலமு நன்னகர
நவநிதியு முனக்கே யென்று
பன்னிகுழல் வாய்மொழியே பாலித்தோம்
பட்டயமும் பாலித்தோமே 20

சொன்னமலை - சொர்னமலை (மேருமலை.) பொன்னுலகு - தேவ லோகம். பன்னி - சொல்லி.

முற்றிற்று.

## வாழ்த்து.

வார்வாழுந் தனத்திகுழல் வாய்மொழியம் பிகைவாழி
வதுவை சூட்டுந்
தார்வாழி திரிகூடத் தார்வாழி குறுமுனிவன்
றலைநாட் சொன்ன
பேர்வாழி யரசர்கள்செங் கோல்வாழி நன்னகரப்
பேரா லோங்கு
மூர்வாழி குற்றாலச் சிவனடியார் வாழி
நீடூழி வாழி.